ஓம்

தத் சத்.

பரப்பிரஹ்மணே நம:

உபதேச மஞ்சரி.

(வினாவிடை ரூபமாய் தொகுக்கப்பெற்ற,

ஸ்ரீ ரமணபகவானருண் மொழிகள்.)

இது,

பாதிராபுலியூர்

வெ. கோவிந்த ரெட்டியாரவர்களால்,

திருவண்ணாமலை

நாகராஜா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

Price] 1929. [1 Anna.

ஓம்

தத் சத்.

பரப்பிரஹ்மணே நம:

உபதேச மஞ்சரி.

(வினாவிடை ரூபமாய் தொகுக்கப்பெற்ற,
ஸ்ரீ ரமணபகவானருள் மொழிகள்.)

இது,

பாதிராபுலியூர்
வெ. கோவிந்த ரெட்டியாரவர்களால்,

திருவண்ணாமலை
நாகராஜா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

Price] **1929.** *[1 Anna.*

ஓம்

தத் சத்.

ஸ்ரீ ரமண பரமாத்மநே நம:

நான்முகம்.


தேஜோமயமாந் திருவருணையில் வீற்றிருந் துலகெங்கும் அருட்கதிர் பரப்பி "அஞ்சலித்திடு மன்பர் துன் பொழிக்கும்" ஞான திவாகரனாய் விளங்கும் ஸ்ரீ ரமண பகவானுடைய சரித்திரத்தையும், உபதேசங்களையும் இதுகாறும் வெளிப் போந்துலவும் பன்னூல் வாயிலாகத் தமிழுலகம் நன்கறியும்.

அன்னார் திருவடித் தொண்டு பூண்டு, அம்மலரடிக்குப் பாமாலைபல சூட்டித் துதிக்கும் மெய்யன்பரும், இதுகால் அருணையிற் றுறவறம் பூண்டு தவநெறியொழுகுபவருமாகிய திரு-நடனாநந்த சுவாமிகள், ஸ்ரீ பகவானிடம் தாம் பற்பல வமயங்களில் கேட்டுத்தெளிந்த சுவானுப்வ வமுத மொழிகளை யாவருமுணர்ந்து ஐயந்திரிபுகளறவேயகன் றுய்யுமாறு உபதேசம், அப்பியாசம், அனுபவம், ஆரூடமென்னும் நான்கு பிரகரணங்களாக வகுத்து 'உபதேச மஞ்சரி' யென்ற பெயருடன் வினவிடை வடிவாய் வெளியிட்டுள்ளார்.

ஆவிக்கு நல்லுணவை நல்கு மிச்சிறு நூலை அன்புடனுதரித் தின்புறுமாறு அன்பர்களை வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ ரமணாச்ரமம்.
23—7—29.

இங்ஙனம்,
R. விச்வநாதய்யர்.



SREE RAMANA MAHARISIGAL
TIRUVANNAMALAI.

ஓம்

தத் சத்.

ஸ்ரீ சற்குருதுணை.

—❀—

உபதேச மஞ்சரி.

மங்கலம்.

சீர்பாதம் வாழ்க சிவத்தொன்று மெஞ்ஞான்றும்
யார்பாதந் தோய்ந்தற்றே னியான்.

நூன்மகிமை.

1. ஸ்ரீ அனாதி அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சிவ சொரூபமே திருமேனியாய் விளங்கும் பகவான் ஸ்ரீ ரமண பரமாத்மாவினுடைய செவ்விய பாதாம்புயங்களைத் திரிகாணங்களாலும் பணிந்து, அன்னாருடைய திவ்யோபதேச மணி மலர்களை, வித்வான்களால் விரும்பத்தக்க வுத்தம வதிகாரிகளான முமுட்சுக்களணிந் துயர்வெய்தற் பொருட்டு 'உபதேசமஞ்சரி' யென்றவிந் நூலாக அணிபெறச் செய்கின்றேன்.

2. எந்த மகாபுருடருடைய, எவ்வுபதேச வாக்கியங்களால் அடியேனுடைய சந்தேக விபரீதங்கள் யாவும் ஆதித்தன்முன் னந்தகாரமென வொருங்கே யொழிந்தனவோ, அந்தமகாபுருடரான ஸ்ரீ மஹரிஷிகளது, அச்சுவானுபவத் திருவமுத மொழிகளின் சாரசங்கிரகமே இந்நூலின் வடிவாம்.

3. சர்வ வேதங்களுடையவும், ஆகமங்களுடையவும் சிரத்தும் அகத்தும் திகழ்வதெதுவோ, சலட்சணமாகவும் விலட்சணமாகவுமுள்ள அந்நித்திய ப்ரஹ்மமே இந்நூலின் பொருளாம்.

4. எல்லா வுபநிடதங்களாலும் புகழப்படும் மேன்மை பொருந்திய பிரமவித்துக்களா லடையத்தகுந்த வுயர்நலனெதுவோ, ஒப்புயர்வறும் புருடசாட்சாத்காரமான அவ் ஆன்ம சித்தியே இந்நூலின் பரம பிரயோசனமாம்.

நூல்.

முதலாவது
உபதேசப் பிரகரணம்.

1. வினா:— சற்குரு வியல் யாது?

விடை:— சந்ததமுஞ் சொரூபத்தில் நிலையுற்று கம்பீரமாய் விளங்கல்; நிரந்தர வபேததிருட்டியுடைமை; தான் மெய்ஞ்ஞானி அல்லது முத்தன், தன்னைச் சூழ்ந்துளோ ரஞ்ஞானிகள் அல்லது பெத்தரென்ற பேதபாவஞ் சற்றுமின்மை; எப்போது மெவ்விடத்து மெக்காரணத்தானுங் கலங்காத தீரத்தன்மையோ டிருத்தலென் பனவாம்.

2. வினா:— சற்சீட வியல் யாது?

விடை:— சர்வதுக்க நிவிருத்தி, பரமாநந்த ப்ராப்திகளி லளவற்ற விருப்பும்; மற்றெவ்வகைப் பேற்றினு மத்தியந்த வெறுப்பு முடைமையாம்.

3. வினா:— உபதேச வியல் யாது?

விடை:— உபதேசம் (உப + தேசம்) என்பதன் பொருள் ¶ 'சேய்மைப்பொருளை அண்மையிற் காட்ட' லென்பதாம். மற்றும் ‡ சத்து, சித்து, ஆனந்தமென்ற விலக்கணங்க ளெதனைப் *பிரதி பாதிக்கின்றனவோ, அக்குரு (சொரூப)

¶ சேய்மை-தூரம். அண்மை-சமீபம். (எது தூரமாகவுந் தன்னின் வேறாகவு முள்ளதெனச் சீடனாற் கருதப்படுகின்றதோ, அந்த ப்ரஹ்மவத்துவானது சமீபமாகவு மனன்னியமாகவு முள்ளதென்பதை யுணர்த்தல். 'தத்துவமசி' யென்ற மகாவாக்கியத்தினுட்பொரு ளிதுவேயாம்). ‡ சத்து-எப்போது முள்ளது. சித்து-அறிவு அல்லது பிரகாசம். ஆனந்தம்-சுகம். * பிரதிபாதித்தல்-சொல்லுதல்.

நிலையினின்றும் பிரிவுற்று சதா விடய † பரிணாமங்களை யடைந்து சுக துக்காதிகளா லடிபட்டுத் தளர்வெய்தும் விருத்திரூபமான சீவனை யங்ஙன மகலவொட்டா தெப்போதுந் தன்னி (சொரூபத்தி) னபேதனாக நிற்கச்செய்த லென்பதும் பொருந்தும்.

4. வினா:— குருநிலையென்பது தன்னிலையே யாயின், எத்தகைய மேலான பண்டிதனே யெனினும், ¶ அணிமாவாதிபெற்ற சித்தனே யெனினும் சற்குரு வநுக்கிரகத்தி னல்லாது ஞானபதம் பெறுதல் கூடா தென்ற சித்தாந்தத்தின் காரணம் யாது?

விடை:— சற்குரு வநுக்கிரகத்தாலன்றி வேறெவ் வுபாயங்களானுந் தன்னிலை விளங்கா தாகையாலங்ஙனங் கூறப்படுகிறது. இதற்குச் சாதாரண வநுபவ மென்னையெனின்; கல்விக்கடலின் கரைகண்டனமென் றிறுமாந்துள்ளா னொருவனையும், செயற்கரியனவுஞ் செய்யவல்லே மென் றிறுமாந்துள்ளா னொருவனையுஞ் சுட்டி, முறையே 'கலையனைத்து மொருங்கு படித்த நின்னைப் படித்தனையோ?'; 'அருஞ்செயலு மாற்றவல்ல நின்னைக்கண்டனையோ?' வென வினவின் றலைகுனிந்து மௌன முறுத லெவர்க்கு மனுபவமாம். சற்குரு சாந்நித்திய விசேட மொன்றினாலேயே சகலவிருத்திகளு மடங்கி நிற்பதே யிங்கு போதிய சான்றாம்.

5. வினா:— சற்குரு வநுக்கிரக வியல் யாது?

விடை:— அது மனவாக்குகட் கடங்கியதன்று.

---

† பரிணாமம்—தோற்றும் பொருள்களின் ரூபங்களை யடைதல்.

¶ அணிமாவாதி சித்திக ளெண்வகையாம். அவை அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவ மென்பனவாம்.

6. வினா:— அங்ஙனமாயின் குருவருளாற் சீடன் றன்னெ தார்த்த நிலையினை யுணர்கிறா னென்பதற் கநுபவம் யாது?

விடை:— அது சிம்ம சொப்பனத்தினால் யானையானது சாக்கிரம் பெறுதலை யொக்கும். என்னை? எங்ஙனம் பொய்யான சொப்பனசிங்க தரிசன மாத்திரத்தாலேயே யானை தூக்கத்தினின்றும் விழிப்பினை யடைகின்றதோ, அங்ஙனமே சற்குருவின் கிருபாவீக்ஷண்ணிய மாத்திரத்தாலேயே சீடனு மஞ்ஞான நித்திரையினின்று மெய்ஞ்ஞான விழிப்பினை யடைகின்றான்.

7. வினா:— சர்வேச்வர சொரூபமே சற்குரு சொரூப மென்பத னுண்மையாது?

விடை:— எந்த சீவனானது மெய்ஞ்ஞானநிலை அல்லது ஈச்வர பதத்தை விரும்பிச் சர்வதா நிட்காம பத்தி செய்து வந்ததோ, அந்த சீவனுக் கனன்னியமாகவுஞ் சாட்சியாகவும் விளங்கும் சர்வேச்வரனே, அப்பத்தியின் முடிவில் இயல்பாகத் தனக்குள்ள சத்து, சித்து, ஆனந்தமென்ற மூன்றம்சங்களோடு கருணையால் நாமரூபமென்ற மற்றிரண்டம்சங்களையுங்கொண்டு மனிதனாய் வெளிவந் தனுக்கிரக வாயிலாகச் சீவனைத் தன்மயப்படுத்தல் சித்தாந்த மாகலான், சந்தேகமின்றிச் சற்குருவை சர்வேச்வரனேயெனக் கொள்ளல் வேண்டும்.

8. வினா:— சிலபெரியோ ரங்ஙனமின்றியே தம்மையுணர்ந் தறிவாகவே விளங்குதற்குக் காரணம் யாது?

விடை:— சில பக்குவிகளுக்கு அவ்வீச னுள்ளீடாக (அறிவுக்கறிவாக)வே நின்று தத்துவ நிலையினை யுணர்த்துவது முண்டு.

9. வினா:— பக்தி அல்லது சித்தாந்த மார்க்கத்தின் முடிவு யாது?

விடை:— † திரிகாண சுத்தியுடன் ஆண்டானடிமையாகச் செய்யும் நிட்காம பக்தியின் முடிவில் 'தன்னுடைய செயல்களென்பன வெல்லாந் தலைவனுடையவையாகவே முடிகின்றன' வென்ற வுண்மையினை யுள்ளவாறுணர்ந்து சுதந்தர(மமகார) மற்று விளங்கலாம். சித்தாந்திகள் கூறும் 'பரபக்தி', 'இறைபணி நிற்றல்' என்ற வாக்கியங்கட்குப் பொருளிதுவேயாம்.

10. வினா:— ஞானம் அல்லது வேதாந்த மார்க்கத்தின் முடிவு யாது?

விடை:— 'நான்' என்ற கர்த்தத்வஞானம் (அகங்காரம்) முற்று மடங்கிய சின்மாத்திரநிலையி லிரண்டற்று விளங்கலாம்.

11. வினா:— இவ்விருமார்க்கங்களுடையவு முடிவுமாத்திர மொன்றே யென்பதற் கனுபவம் யாது?

விடை:— இவ்விரு மார்க்கங்களினுமே மனோவாக்குகட் ககோசரமாய மௌனநிலை சித்திப்பதால் முடி வொன்றே யென்பதிற் சம்சயமில்லை.

குறிப்பு:— தானுள்ளவரையிற் றலைவனையு மேற்படகே யாவர்க்கு முடன்பாடாம். தற்போதமிழந்த சாயுச்சிய நிலையினைச் சீக்கிரத்தி லெளிதாகப் பெறவேண்டின் முடிவுவரை யிங்ஙனங் கொள்ளலே தகுதியாம்.

உபதேசப் பிரகரணம் முற்றுப் பெற்றது.

இரண்டாவது

அப்பியாசப் பிரகரணம்.

---

1. வினா:— அப்பியாச வியல் யாது?

---

† திரிகாணம்—மனம், வாக்கு, காயம்.

விடை:— எவன் நிரந்தர வப்பியாசத்தினு லான்ம சொரூபத்தை யடைய முயல்வானே அவனினு மவ்வான்மவத்து வேருக வின்மையானும்; அவனுக் கன்னியமாகவு முயர்வாகவு மவனடையத்தக்கதுபிறிதொன்றுமின்மையானும்; நித்திய வநித்திய வத்து விவேகத்தாற் றன்னெதார்த்த நிலையினைச் சந்தேக விபரீதங்களறத் தெரிந்து, எப்போதுந் தன்சுபாவநிலையினின்று மாருதிருப்பதே யாம்.

2. வினு:— அங்ஙன மப்பியசிக்க வியலாதவர்க்குரிய சாதனக் கிரமங்கள் வேறெவையேனு முண்டோ?

விடை:— உண்டு. அவை * தெய்வ தோத்திரமுத லான்ம விசார மீருய பலமார்க்கங்களாம். சித்தத்தின் றிர நிலக்கே சர்வசாதனங்களு மவலம்பிக்கப் படுகின்றனவாம்.

3. வினு:— தேகத்தில் ஆன்ம நிலக்குரிய ஸ்தானமெது?

விடை:— வலது மார்பகத்துள்ள ஹ்ருதயஸ்தானமே பொதுவாகக் குறிப்பிடப்படும். இதற்கனுபவ மென்னையெனின், தமதிருப்பைப் பிறர் முன் கூறுங்கால் வலது மார்பகத்தைச் சுட்டியே 'நான்' என்றுரைப்ப தெவர்க்கு மியல்பாம். ஒரு சிலர் சகஸ்ராரமே ஆன்மஸ்தானமென்கின்றனர். அங்ஙனமாயின் நித்திரை, மயக்கமாதிய காலங்களிற் றலைசோர்தல் கூடாது. இஃதொருவா றிருந்தாலும், இதயம் என்ற சொற்குப்பொருள் ஆன்மாவேயாம். அது அகண்டமானது. அதற்கு உள்வெளி, கீழ்மேலென்பதாதிய அங்கபேதங்களே கிடையா. சர்வ நினைவுகளு மெவ்விடத் தொடுங்குமோ, அந்நிச்சலமான விடமே ஆன்மநிலை யெனப்

* துதி, செபம், தியானம், மனோ லயத்திற்கான் பிராண நிரோதம், மனோ நாசத்திற்கான சமாதிவகைக ளென்பனவே சாதனக்கிரமங்களாம்.

படும். அந்த தேகத்திற் குள்ளிலோ புறம்பிலோ வென்பதைப் பற்றிய வாராய்ச்சி யிங்கு வேண்டுவதின்ரும்.

4. வினு:— புறத்தில் விடய சங்கங்க ளில்லாத காலத்தும் மனதின்கண் விடயங்க ளளவற்றனவாய்த் தோற்றுதற்குக் காரணம் யாது?

விடை:— அவையனைத்தும் வாசனு வடிவமாகவுள்ள பூர்வ சம்ஸ்காரங்களே யாம். நிச்சலனமான தன் சுபாவ இருப்புமாத்திர நிலையினை விட்டுத் தன்முன்விளங்குந் தோற்ற பரிணுமமடையுஞ் சீவவறிவுக்கே, அவை புலனுகின்றன. எங்கெங்கே யெதெது தோன்றினுலும், அங்கங்கு மிவற்றைக்காண்பவன் யாரென்று விசாரித்தாலவை யங்கங்கே நாசமுறும்.

5. வினு:— சுழுத்தி, சமாதி முதலியகாலங்களி லில்லாத திரிபுடிவிசேடங்க ளான்மாவிற் கற்பனையாவதெப்படி?

விடை:— ஆன்ம வத்துவினின்று முதலில் ஓர் தெளிவு (பலமு)ம், பின்ன ரதனின்றும் நானென்னு மறிவா (முதல் விருத்தியா) கிய காண்பான், காட்சியாதிகளுந் தோன்று கின்றன.

6. வினு:— ஆன்மா அறிவறியாமைக ளற்றதாயிருக்க, அது உணர்வு வடிவாய்தேகமுழுதும் வியாபிப்பதும், கரணேந்திரியங்கட்குச் சேதனத்துவங் கொடுப்பது மெவ்வாறு?

விடை:— தேக முழுதும் பரவியுள்ள நுண்ணிய நாடிகளுடையமூலத்திற்கும் ஆன்மநிலைக்கும்சம்பந்த முண்டென்றும்; தத்துவ ஞானத்தா லிதனை (கிரந்தியை)நீக்கும் பரியந்த மிச்சம்பந்த மிருக்குமென்றும்; அதி சூக்குமமானதுங் கண்ணுக்குத் தெரியாததுமான மின்சார சக்தியானது, தந்திகளின் வழியாகச் சென்று பற்பல

வற்புத காரியங்களைச் செய்வது போன்று, ஆன்ம சக்தியும் நாடிகளின் வழியாகச்சென்று தேகமுழுதும் வியாபித்துக் கர்மேந்திரியங்கட் கறிவைக்கொடுக்கிறதென்றும்; இக்கிரந்தியினைப் பேதித்துவிட்டால் யாதொரு விசேட ஞானமு மின்றி ஆன்மா வெப்போது மிருந்தபடியே யிருக்குமென்றுந் தத்துவ தரிசிகள் கூறு கின்றனர்.

7. வினா:— சாமான்னிய ஞானவடிவ ஆன்மனைதன்னியத் திற்கும் விசேடஞானவடிவ திரிபுடிகட்கும் சம் பந்த முண்டாவ தெப்படி?

விடை:— இது பயாஸ்கோப் (Cinema) என்னும் விநோதக்காட்சியின் நிகழ்வினை யொருவாறு ஒக்கும். எங்ஙனமெனின்:—

திருட்டாந்தத்தில்,	தாட்டாந்தத்தில்,
a. உள்ளிருக்குந் தீபத்திற்கும்,	ஆன்மாவிற்கும்;
b. தீபத்தைச்சமீபித்திருக்கும் பூதக்கண்ணாடிக்கும்,	ஆன்மாவைச் சமீபித்திருக்கும் (சத்துவகுண)மனதிற்கும்;
c. சித்திரத் திரள்களின் கோவையே வடிவான நாடாவிற்கும்,	அதிலிருக்கும நினைவுகளின் கோவையே வடிவான வாசனைத் தொகுதிக்கும்;
d. கண்ணாடி, அதிற்றோன்றும் பிரகாசம், தீபம் ஆகியவிம் மூன்றம்சங்களுஞ் சேர்ந்த கண்ணாடி ப்ரகாசத்திற்கும்,	மனம், அதிற்றோன்றும் பிரகாசம், ஆன்மா ஆகியவிம் மூன்றம்சங்களுஞ் சேர்ந்த காண்பா (சிவ)னுக்கும்;
e. கண்ணாடியி னின்றும் வெளிப்பட்டுத் திரையிற்றோன்றுந் தீப ப்ரகாசத்திற்கும்,	மனதினின்றும் வெளிப்பட்டு இந்திரியவாயிலாக ப்ரபஞ்சத்திற் றோன்று மான்மப்ரகாசத்திற்கும்;

f. திரை வெளிச்சத்திற்றேன்றும் நாநாவிதவிசித்திர ரூபங்கட்கும், } ப்பஞ்ச வெளிச்சத்திற்றேன்றும் நாநாவித நாமரூப திருசிய ப்தார்த்தங்கட்கும்;

g. நாடாவையிழுக்கும் யந்திரத்திற்கும், } வாசனைகளைத் தோற்றுவிக்கும் ஈச்வர நியதிக்கும்;

சமானங் கொள்ளப்படும்.

கண்ணுடிவழியாய், சித்திரக்கோவைகளின் வடிவான நாடா விளங்கும்வரை திரையிலுந் தோற்றங்கள் விளங்குவது போன்று, அந்தக்கரணத்தில் வாசனை யுள்ளவரை சாக்கிர சொப்பனங்களிற் சீவனுக்குத் திருசிய பிரபஞ்சங்கள் தோற்றிக்கொண்டிருக்கும். கண்ணுடி, நாடாவிலுள்ளதினையத்தனை யுருவைப் பனையத்தனையாகவும், ஒருகணத்திற் பல வடிவங்களையுந் தோற்றுவித்தல் போன்று; மனமும், அங்குரம் போன்றவாசனைகளை விருட்சம்போன்றும், ஒருகணத்திற் பல நாமரூபங்களையுந் தோற்றுவிக்கின்றது. நாடாவி னபாவகாலத்தில் தீபப்பிரகாச மாத்திரமே விளங்கிக் கொண்டிருத்தல் போன்று, விருத்திரூபமாகிய வாசனையி னபாவகாலமான சுழுத்தி, மூர்ச்சை, சமாதியாதிகளில் திரிபுடிகளின்றி ஆன்ம ப்ரகாச மாத்திரமே விளங்கிக்கொண் டிருக்கும். தீபம் கண்ணுடியாதிகளை ப்ரகாசிப்பித்துந் தான் மாத்திரம் நிர்விகாரியாகவே யிருத்தல் போன்று, ஆன்மாவும் சிதாபாசனுதியவற்றை ப்ரகாசிப்பித்துந் தான்மாத்திரம் நிர்விகாரியாகவே யிருந்தபடி யிருக்கிறது.

8. வினு:— தியான் வியல் யாது?

விடை:— எவ்வவத்தையினுந் தன்னிலையினின்றுஞ் சற்றும் நழுவாது தியான நினைவுக்கு மிடங்கொடாதிருத்தலேயாம். இந்நிலையி லவத்தா பேதங்க ளற்பமுந்தோன்றுமையால் இங்குள்ள வுறக்கமுந் தியானமென்றே கருதப்படும்.

9. வினு:— தியானத்திற்கும் சமாதிக்குமுள்ள பேதம் யாது?

விடை:— சொப்பிரயத்தன மனோகற்பிதந் தியானமென்றும், அஃதடங்கியது சமாதி யென்றுஞ்சொல்லப்படும்.

10. வின:— தியானத்தி லவசியங் கவனிக்கப்படவேண்டிய அம்சங்களெவை?

விடை:— ஆன்மநிட்ட னெப்போதேனு மான்மாவிற் றனக்குள்ள ஏகாக்ரத் தன்மையினை விட்டு நழுவுவானாயின், அப்போ தங்குதோற்றமாகும் பற்பல காட்சிகளாய மனோகற்பிதங்களை யெதிரிட் டறிவதனாலோ, நாதமுதலியவற்றி னாட்டத்தினாலோ, புறத்திற்றோன்றும் நாமரூபத்தோடுள்ள ஈச்வர மூர்த்தியாதிகளின் றரிசனங்களாலோ ஏமாறக்கூடாது. திருசியங்களை யறியு மறிவே சத்திய மன்றெனின் அறிபடுபொருளெங்ஙனஞ் சத்தியமாகும்.

குறிப்பு:— (1) வீண்சிந்தனைகளிற் (அனாத்ம விசாரணையிற்) போக்குமொவ்வொரு நிமிடத்தையும் ஆன்மவிசாரத்தி லுபயோகித்தா லதி சீக்கிரத்தி லான்மசாட்சாத்காரஞ் சித்திக்கும்.

(2) மனதிற்குத் தன்னிலையிற் பிடிப் பேற்படுகிற வரையில் சாதனைக் கேதேனு மொரு பாவனை யத்தியாவசியமாகும். இன்றேல் விருத்திகளேனு முறக்கமேனு மடிக்கடி வந்து தாக்கும்.

(3) நிர்க்குணோபாசனைக்குரிய சிவோகமாதிய பாவனையினுந் தன்னை யுள்ளபடியே தேடும் பழக்கஞ் சிறந்ததாம்.

(4) எவ்வாற்றானேனு மொருவிருத்திக்குக்கூட விடந்தாதிருத்தலே சாதனைக்குச் சிறப்பாம்.

11. வின:— சாதக னனுட்டித்தற்கான நெறிகள் யாவை?

விடை:— மித ஆகாரநித்திரைவார்த்தையாதிகளே.

12. வின:— எதுகாறுஞ் சாதனை வேண்டும்?

விடை:— அகங்கார, மமகாரங்கள் முற்றும்நசிக்கிறவரை. அதாவது மனம், முயற்சியின்றியே விருத்தியற்ற நிலையினை சகசமாக அடையும் வரை நிரந்தரசாதனை வேண்டும்.

13. வினா:— ஏகாந்தவாச மென்பதன் பொருள் யாது?

விடை:—ஆன்மாசர்வ வியாபக வத்துவாகலான், ஏகாந்த வாசமென் றதற்கோர் தனியிடமில்லை. விருத்தி சூன்னிய நிலையே ஏகாந்தவாசமெனப்படும்.

14. வினா:— பிராரத்தவசமாகவே யாவும் நிகழுமெனின், தியானத்திற் கிடையூறாகச்சம்பவிக்குந் தடைகளைக் கடப்பதெப்படி?

விடை:— ப்ராரத்தமென்பது வெளிமுகத்திற்கேயொழிய வுண்முகத்திற் கன்று. ஆகவே உள்ளபடியே தன்னைத்தேடுவோ னெவ்விதத் தடைகளுக்கு மஞ்சான். தடை யென்ற நினைவே பெருந் தடையாம்.

15. வினா:— விவேக வியல் யாது?

விடை:— ஓர்கா லுண்மையுணர்ந்தபின் வேறொன்றிலும் பிரமை கொள்ளா திருத்தலேயாம்.

அப்பியாசப் பிரகரணம் முற்றுப் பெற்றது.

மூன்றாவது

அநுபவப் பிரகரணம்.

---

1. வினா:— சிற்சோதி அல்லது சொரூபப்ரகாச வியல் யாது?

விடை:— காண்பானுக்குத் தோற்றமாகும்படி சர்வநாமரூப திருசிய பதார்த்தங்களையு முள்ளும் புறம்பும் ப்ரகாசிப்பிப்பதெதுவோ அச்சித்தேயாம்.

அச்சோதியினிருப்பு அங்குள்ளதோற்றங்களைக் கொண்டுகிக்கப்படுகிறதேயல்லால் அது தனியாக விடயமாவதில்லை.

2. வினா:— விஞ்ஞான வியல் யாது?

விடை:— அலையற்ற கடலெனவும், அசைவற்றவாகாயமெனவும் சகலவிருத்திகளும் அடங்கியுள்ள நிலைபெறுவதுவோ, சாதகனுக்கு விளங்கக்கூடிய சித் (ஞப்தி) மாத்திர அந்நிலையே யாம்.

3. வினா:— ஆநந்த வியல் யாது?

விடை:— சர்வ வ்யவகாரங்களு மற்றதும் சுழுத்தியைப் போன்றதுமான அவ்விஞ்ஞான நிலையிலுள்ள சுகா (சாந்தா) னுபவமேயாம். இதனையே கேவல நிருவிகற்ப சமாதியென்று கூறுவர்.

4. வினா:— ஆநந்தாதீத வியல் யாது?

விடை:— வியவகாரங்களற்ற சுழுத்தியைப் போன்றுள்ள அந்நிலையினின்றும் நனவிற்சுழுத்தி ஸ்திதியைப் பெற்று முன்னுள்ளவாநந்தானுபவத்தோடும் விளங்குநிலையாம். இந்நிலையிற் றேகேந்திரிய காரணாதிகளின் சலனங்க ளிருந்தும் ‡நித்திராமக்த பாலநியாயம்போ லதிற்றனக் கற்பமுந்திருட்டி யின்மையால் இத்தகையயோகி, சர்வவியவகாரங்களையுஞ்செய்தும் செய்யாதவனாகின்றான். இதனையே சகசநிருவிகற்ப சமாதியென்று கூறுவர்.

5. வினா:— சராசரப் பிரபஞ்சங்கள் யாவுந் தன்னையே யாச்ரயித்துள்ளன வென்பதற்கனுபவம் யாது?

விடை:— இங்கு தன்னை யென்பதற்குத் தேகத்தைப் பொருளாகக் கொள்ளல் கூடாது. சுழுத்தியி

---

‡ உறங்கும் பாலர்கள் செய்யும் அருந்தலாதிய வ்யவகாரங்கள் பிறர் திருட்டியிலுள்ளனவே யன்றி அப்பாலர்களது திருட்டியிலின்மையா லப்பாலர்க ளவ்வியவகாரங்களைச்செய்துஞ் செய்திலராம்.

லடங்கிக்கிடந்த ஏதோவோர் சக்தியானது நானென்ற ஞானத்துடன் வெளிப்பட்ட பின்பே சகலவிடயங்களு மனுபவ மாகலானும்; காண்பானாகிய தான் அங்கங்கு மிருத்தலானும்; தானில்லாவிடத் தன்னிய‡ப்ரதீதி அணுவுமின்மையானும் சர்வமுந் தன்னிடத்தே தோன்றி நின் றழிகின்றன வென்பதிற் சிறிதுஞ் சம்சய மில்லை.

6. வினு:— தேகங்களு மவற்றையியக்குந் தேகிகளும் பிரத்தியட்சத்தி லங்கங்குமனந்தமாயிருக்க ஆன்மா வொன்றே யென்பதற் கனுபவம் யாது?

விடை:— § தேகோகவறிவையே ஆன்மாவாகக் கொள்வதாயி னான்மா பலவே. ஆனா லவ்வறிவு நசிக்குமிடமே ஆன்மாவாகலான், அங்கிரண்டாவது பதார்த்தமணுவுமின்மைபற்றி யங்ஙனங் கூறப்படுகிறது.

7. வினு:— ப்ரஹ்மம் மனதிற் * அகோசரமாகவும் ‡ கோசரமாகவு முள்ளதென்பதற் கனுபவம் யாது?

விடை:— அது அசுத்தமனதிற் அகோசரமாகவும் சுத்தமனதிற்குக் கோசரமாகவுமுள்ளது.

8. வினு:— சுத்த, அசுத்த மனங்களி னியல்யாவை?

விடை:— ப்ரஹ்மத்தினின்றும்வேறுபட்டு நாநாரூபத்தையடையுமாபாசசகித அநிர்வசனீயசக்தியானது, எப்போது விவேகத்தா லாபாசரகிதம்பெறுமோ அப்போது அதனையே சுத்தமன மெனவும்; ப்ரஹ்மத்தோடுள்ள அதனைக்கிய ஸ்திதியினையே

---

‡ ப்ரதீதி—தோற்றம்.

§ தேகோகவறிவு—தேகமே நானென்னும் பாவம். இதனை ஹிருதய கிரந்தி யெனவுங் கூறுவர். பலவகையாகக் கூறப்படுங் கிரந்திகளி லிவ்விதய கிரந்தியின் பேதிப் பொன்றினாலேயேதான் பந்த நிவிருத்தி கூடுமென் றறிக.

* அகோசரம்—எட்டாமை. ‡ கோசரம்—எட்டல்.

கோசர மெனவும் சொல்லப்படும். ஆபாச சகித சக்தியையே அசுத்தமன மெனவும், ப்ரஹ்மத் தோடுள்ள அதனைக்கியமற்ற ஸ்திதியினையே அகோசர மெனவுஞ் சொல்லப்படும்.

9. வினா:—தேகமுழுவுமளவும் ஞானியையுந் தொடருமென்ற பிராரப்தத்தினைத் தேகமுள்ளபோதே கடக்க வல்லார் யாரேனுமுளரோ?

விடை:— உளர். யாவரெனின், பிராரத்த மெந்த கர்த்தாவை யாச்ரயித்துள்ளதோ தேகவான்மாக்களுக் கிடையே முளைத்த அவ்வகங்காரமானது, தன்னெதார்த்த சொரூபத்தி லடங்கி யுருவழியின் அதனை யாச்ரயித் திருந்த பிராரத்த மாத்திர முயிர்த்திருத்த லெங்ஙனம்? ஆகவே நானற்ற விடத்துப் பிராரத்தமில்லை யென்க.

10. வினா:— ஆன்மா சத்தாகவு மறிவாகவுமிருக்க அதனை சதசத் விலட்சணமானதென்றும் அறிவறியாமைக ளற்றதென்றுங் கூறுதற்கேதுவென்னை?

விடை:— வஸ்துசத்தாகவே யிருப்பினும் அஃதெல்லாமா யிருத்தலானும்; அதற்கன்னிய மணுவு மின்மையானும்; சத்தெனி னசத்தென்ற துவித ஞானத்திற் கிடனாகுமாகலானும்; அது நித்திய வகண்ட பரிபூரணமான தென்பதை விளக்க வேண்டியும்'சதசத்விலட்சணமான'தென்றும்: தானறிதற்கும் தன்னையறிதற்கும் அன்னிய மொன்று மின்மையால் 'அறிவறியாமைக ளற்றதென்றும்' கூறப்படுகிறது.

11. வினா:— வேதாந்த கிரந்தங்களால் ஞானிகளுக் குண்டாகும் பிரயோசனம் யாது?

விடை:— சர்வ கிரந்தங்களு மஞ்ஞானிகளுக் கேற்பட்டனவே யன்றி ஞானிகளுக் கல்ல.

அநுபவப் பிரகரணம் முற்றுப் பெற்றது.

—o—

நான்காவது

ஆரூடப் பிரகரணம்.

1. வின:— ஞானத்தி னாரூட வியல் யாது?

விடை:— திர நிலையே யாம்.

2. வின:— ஞானபூமிக ளேழனு ளெந்தபூமியி லுள்ளவன் ஞானி யெனப்படுகிறான்?

விடை:— நான்காம் பூமியி லுள்ளவனே.

3. வின:— அங்ஙனமாயின் அதற்குமேல் மற்றும் மூன்று பூமிகளை வகுத்திருப்ப தேன்?

விடை:— நான்குமுத லேழுபூமிகள் வரையுமுள்ள விலக்கணங்கள் ஜீவன் முத்தியிலுள்ள வனுபவ பேதங்களைப் பற்றியனவே யொழிய, ஞான நிலையைப் பற்றியனவோ மோக்ஷ நிலையைப் பற்றியனவோ அல்ல. ஞான, மோக்ஷ நிலைகள் சம்பந்தப் பட்டவரை அந்நான்கிலு மற்பமும் பேதமில்லை.

4. வின:— மோக்ஷ நிலையே பிரதானமாயிருக்க வரிட்ட பதத்தி லுள்ளவனை மட்டும் சுருதிகள் மிகு தியுஞ் சிறப்பித் திருப்பதேன்?

விடை:— வரிட்ட னுடைய நிரந்தர சுகாநுபவ சம்பந்தப் பட்டவரை அதற்குக் காரணமான பூர்வ புண்ணிய விசேடம்பற்றி யங்ஙனஞ் சிறப்பிக் கின்றனவே யல்லாது வேறுகாரணத்தாலல்ல.

5. வின:— நிரந்தர சுகாநுபவத்தை விரும்பாதா ரொவரு மின்மையால் ஏன் ஞானிகளனைவருமே பிரயத் தனத்தா லவ்வரிட்டபத மடையக் கூடாது?

விடை:— அது கோரிக்கையாலும், முயற்சியாலுமடை யப்படுவதன்று. அதற்குக்காரணம் பிராரத்தமே

யாகும். வரிட்டனே விசேடித்துக்கூறும் சுருதி கள் மற்றமூவரையும் ஞானிக ளல்லவென்று கூறவில்லையே. நான்காம் பூமியிலேயே அகங் காரமுற்றும்நாசமடைவதா லதற்குமே லொன் றை விரும்பவும், முயலவும், அடையவுங் கர்த்தாவாயுளர் யார்? ஆகவே முயற்சியுள்ள வரையில் ஞானம் பெறவில்லையென்றே கருதப் படும்.

6. வி:— சகலதேகேந்திரிய வந்தக்கரண வநுபவங்களும் அடங்கிய நிலையே முடிந்தநிலையென்ற சில ருடையதீர்ப்புசம்பந்தமாய் தேவரீரது சித்தாந் தம் யாது?

விடை:— அங்ஙனமாயின்,கேவலசுழுத்தியினும் அந்நிலைக் குள்ளவிசேடமொன்றுமில்லையே. அன்றியும் அது ஒருபோதிருந்து மற்றொருபோது மாறு தலா லதனைச் சுபாவ நிலையென லெங்ஙனம் பொருந்தும்? அதுசிலருக்கு மேற்கூறியவாறு பிராரத்த வசத்தாற் சிலகாலம் வரையுமோ தேகாந்தம்வரையுமோ வாய்க்கிறதே யல்லால் அதுதான் முடிந்தநிலை யெனக் கொள்ளுதற் கில்லை. அங்ஙனங் கொள்வதாயின், இதுகாறு மேற்பட்டுள்ள வெண்ணிறந்த ஞானசாத்திரங் கட்கும் வேதங்கட்கும் ஆசிரியர்களாகவுள்ள பெரியோர்களு மீச்வாறு மஞ்ஞானிகளென் றன்றோபொருள்படும்? சர்வதேகேந்திரியவந்தக் கரணங்களு மற்றவிடத்துத்தா னுள்ளதென்ற சொரூபநிலை, அவைகளுள்ளவிடத்தி லில்லாம லிருக்கிறதா? சகசநிருவிகற்ப நிலையையே முடி வாகப் பெரியோர் கூறுகின்றனர். ஆகவே ஞானிகளுடைய பிரவிருத்திக்கும் நிவிருத்திக் கும் பிராரத்தமே காரணமென்க.

7. வி:— கேவல சுழுத்தி நிலைக்கும் சாக்கிரசுழுத்தி நிலைக் கும் அனுபவத்திலுள்ள பேதம் யாது?

விடை:— கேவலசுழுத்தி நிலையில் நினைவுகளே யன்றி நனவு (ஞெப்தியு) மில்லை. சாக்கிரசுழுத்தியில் நனவு மாத்திரமுண்டு. அதனால்தான் நனவிற் சுழுத்தி (நனவுள்ள சுழுத்தி) யென்று சொல்லப்படுகிறது.

அரூடப் பிரகாணம் முற்றுப்பெற்றது.

பகவானான ஸ்ரீரமண மகரிஷிகளது திருவுளவெழுதா மறையி னின்றும் வெளிவந்த பிரத்தியட்ச சுவாநுபூதி வாக்கியங்களே யுருவாயவிந்நால், துறந்தார்தந் தூய்மைமிகு மிதயவிளக் கனைத்திற்கு மொளியுதவித் தன்மயப்படுத்துங் குன்றாத மெய்ஞ்ஞானப் பொருட்சுடராய்மன்னி யெஞ் ஞான்றும் பிரகாசிக்கிறதாம்.

வாழ்த்து.

எவரருள்பெற் றுய்ந்தேனின் றெஞ்ஞான்றும் வாழ்க
வவரருள்போற் ருளேன் னகத்து.

ஸ்ரீ ரமண சற்குரு பகவான் றிருவடிவாழ்க.

சுபம்.

வினுவிடைகளின் விஷய அட்டவணை.

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்

அருளிச்செய்தவை.

	ரூ.	அ.
ரமணகீதை மூலம். (நாகரலிபி)	0	4
ஷை (தமிழ் உரையுடன் லாதா பைண்ட்.	0	12
ஷை ஷை காலிகோபைண்ட்.	1	0
ஷை தெலுங்கு லிபி (உரையுடன்).	0	12
விவேகசூடாமணி வசனம் (தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம், திருக்கு திருசிய விவேகம், அத்தாமலகம் குருஸ்துதிகளுடன்).	0	7
அருணாசல ஸ்துதி பஞ்சகம் (அக்ஷரமணமாலை, பஞ்சரத்னம், பதிகம், அஷ்டகம், பஞ்சகம் அடங்கியது).	0	2
தேவிகாலோத்தரம் (ஞானசாரவிசார படலம்.)	0	2
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்).	0	1
உபதேச வுந்தியார் (ஸம்ஸ்க்ருத மூலம் உரையுடன்)	0	1
ஷை (தமிழ் உரையுடன்).	0	1
ஷை (தெலுங்கு மூலம் உரையுடன்).	0	½
ஷை (மலையாளம் மூலம்.)	0	½

ஸ்ரீ ஈச்வர சுவாமிகள் அருளியவை.

ஸ்ரீ மஹர்ஷி ரமண சரித வசனம்.	0	5
ஸ்ரீ அருணாசல மகாத்மிய வசனம்.	0	12

இதர புத்தகங்கள்.

சொரூபதர்ப்பணம் (சுவாமி—நடனானந்தர் இயற்றியது.)	0	1
உபதேச மஞ்சரி (வினாவிடை ரூபமாய் தொகுக்கப் பெற்ற ஸ்ரீரமணமஹர்ஷிகளின் அருள்மொழிகள்.)	0	1

விலாசம்:—ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்

திருவண்ணாமலை.